**<u>In the Court of the District Munsif, Eraniel</u>**

**Original Suit No. 44/2016** **Date:12.03.2026.**

**(PW1)- வில்பிரட் சாம்ஜோசப்**

<u>**2 முதல் 4 பிரதிவாதிகள்** தரப்பு குறுக்கு விசாரணை தொடர்ச்சி</u>

1. நான் விசாரணையில் நில கையகப்படுத்தியதற்கு எதிராக ஆட்சேபனை மட்டுமே தெரிவித்துள்ளேன் என்றாலும் இழப்பீடு கேட்கவில்லையென்றால் சரியல்ல. எனது முதல் விசாரணையில் கிராம நிர்வாக அலுவலரை சுவாதினப்படுத்தி 1ம் பிரதிவாதி பெயரை பதிவு செய்த இழப்பீடு பெற்றுள்ளதாக வழக்கிற்காக பொய்யாக கூறியுள்ளேன் என்றால் சரியல்ல. நான் முறையாக குறிப்பிட்டு நாளில் விசாரணைக்கு ஆஜர் ஆகாமலும் சொத்தில் எனது உரிமையை காட்டகூடிய ஆவணங்களை சமர்பிக்காததாலும் இழப்பீடு கேட்காததாலும், 1ம் பிரதிவாதியின் ஆவணங்களை ஆய்வு செய்ததன் அடிப்படையில் அரசு அதிகாரிகளால் அரசு ஆவணங்களை ஆய்வு செய்து நிலத்தை பார்வையிட்டு 1ம் பிரதிவாதி சொத்தின் உரிமையாளர் என்பதை உறுதி செய்து அவருக்கு இழப்பீடு வழங்கியுள்ளார்கள் என்றால் சரியல்ல. நான் கூறுவது போல் அதிகாரிகள் கூட்டு சதி செய்து இழப்பீடை 1ம் பிரதிவாதிக்கு வழங்கியுள்ளார்கள் என்று வழக்கிற்காக பொய்யாக கூறுகிறேன் என்றால் சரியல்ல. இழப்பீடு முறையாக ஆய்வு செய்த பின்னரே 1ம் பிரதிவாதிக்கு வழங்கப்பட்டுள்ளது என்றாலும் எனவே நான் கோரியுள்ள பரிகாரம் எனக்கு கிடைக்கதக்கது அல்ல என்றாலும் இவ்வழக்கு 2 முதல் 4 பிரதிவாதிகளின் செலவு தொகையுடன் தள்ளுபடி செய்யப்படவேண்டியது என்றால் சரியல்ல.

(ஒப்பம்)

**மாவட்ட உரிமையியல் நீதிபதி**,

இரணியல்.